Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 29, 2021 4 பக்கங்கள் ரூ.2/- | இதழ் 46

## தி.மு.க. உறுப்பினர்கள் என்னையும், தலைவர்களையும் புகழ்ந்து பேசுவதை தவிர்க்க வேண்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆகஸ்ட் 29 2021: சட்டசபையில் இன்று மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய கடலூர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. அய்யப்பன் நீண்ட நேரமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் மறைந்த தலைவர்கள் அண்ணா, கருணாநிதி ஆகியோரை அதிக அளவில் புகழ்ந்து பேசினார்.

சுமார் 5 நிமிடங்களுக்கு மேலாக மு.க.ஸ்டாலினை பற்றி பல்வேறு வார்த்தைகளை கூறி அவர் புகழ்ந்து பேசியபடியே இருந்தார். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறுக்கிட்டு எழுந்து பேசினார். அவர் பேசியதாவது:

தி.மு.க. உறுப்பினர் அய்யப்பன் என்னைப்பற்றி புகழ்ந்து பேசிக்கொண்டே இருக்கிறார். நான் நேற்றே இதுபோன்ற புகழ்ச்சிகளை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்து உள்ளேன்.

எனவே இருப்பினும் இன்று உறுப்பினர் தொடர்ந்து புகழ்ந்து பேசிக்கொண்டே இருக்கிறார். இது தொடர்ந்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியது இருக்கும். எனவே தி.மு.க. உறுப்பினர்கள் என்னையும், தலைவர்களையும் புகழ்ந்து பேசுவதை குறைத்துவிட்டு மானிய கோரிக்கையை பற்றி மட்டுமே பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இதன் பிறகு தனது பேச்சை தொடர்ந்த தி.மு.க. உறுப்பினர் அய்யப்பன் மீண்டும் மு.க.ஸ்டாலினை புகழ்ந்து பேசிவிட்டு அமர்ந்தார்.

## வேளாண் சட்டங்களுக்கு எதிரான தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார்

சென்னை, ஆகஸ்ட் 29 2021: தமிழக சட்டசபையில் இன்று மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிரான தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார். இதற்கு காங்கிரஸ், பா.ம.க, வி.சி.க, ம.தி.மு.க, தமிழக வாழ்வுரிமை கட்சி, ம.ம.க உள்ளிட்ட கட்சிகள் ஆதரவளித்த நிலையில், அ.தி.மு.க, பா.ஜ.க எதிர்ப்பு தெரிவித்து அவையிலிருந்து வெளிநடப்பு செய்தன.

இந்நிலையில், வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராடிய விவசாயிகள் மீதான வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படுவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் அறிவித்துள்ளார். இதற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூரில்



200 கோடி ரூபாய் செலவில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும் என மீன்வளத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



**தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டம் பழைய காயல் மற்றும் புன்னைக்காயல் பகுதிகளின் தாமிரபரணி ஆற்று முகத்துவாரப் பணிகளில் வனத்துறை மூலம் உருவாக்கப்பட்ட மாங்குரோவ் (சதுப்புநில காடுகள்) தோட்டப்பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட வன அலுவலர் அபிஷேக் டோமர், தூத்துக்குடி வன உயிரின வனச்சரகர் ரகுவரன், ஏரல் வட்டாச்சியர் இசக்கிராஜ் மற்றும் வனத்துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் உள்ளனர்.**

## வெங்கலப் பதக்கம் வென்ற விழுப்புரத்தை சேர்ந்த தடகள வீரர் பரத்திற்கு மாவட்ட ஆட்சிய வளாகத்தில் கலெக்டர், எஸ்.பி., வாழ்த்து

விழுப்புரம், ஆக. 29 2021: கென்யா, நைரோபியில் நடைபெற்ற உலக அளவிலான யு 20 400 மீட்டர் தடகள போட்டியில் வெங்கல பதக்கம் பரிசு பெற்ற விளையாட்டு வீரர் பரத்தை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மோகன் பாராட்டினார். விழுப்புரத்தில் உள்ள தனியார் ஆங்கில பள்ளியில் பரத் (18) 12 வகுப்பு வரை படித்துள்ளார். தற்போது சென்னை லயோலா கல்லூரியில் பி. ஏ. வரலாறு இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். நைரோபியில் நடைபெற்ற உலக அளவிலான தடகள போட்டி கடந்த 18 தேதி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு வெங்கல பதக்கம் வென்றார்.

இது குறித்து தனது அனுபவத்தை பற்றி கூறும் போது. ஆறாம் வகுப்பில் படிக்கும் போது எனக்குள் இருக்கும் விளையாட்டு திறமையை கண்டு பிடித்து பயிற்சி அளித்தவர் ரயில், சென்னையில் எனக்கு பயிற்சி அளித்தவர் புகழேந்தி. இவர்கள் இருவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். கோவிட் - 19, காலத்தில் நான் விழுப்புரத்தில் பயிற்சி பெற்றேன். இதற்கு உறுதுணையாக இருந்து ஊக்கம் அளித்து விளையாட்டு மைதானம் ஏற்பாடு செய்த முன்னாள் நகர்மன்ற தலைவர் ஜனகராஜ் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். போட்டியின்



போது எனது இடது காலில் சிறிய அளவில் வலி இருந்தது. அதனையும் பொறுத்து கொண்டு போட்டியில் கலந்து கொண்டு பதக்கம் வென்றேன். இவ்வாறு தனது அனுபவத்தை கூறினார். மாவட்ட ஆட்சியர் மோகன், பரத்திற்கு எந்த உதவி வேண்டும் என்றாலும் எப்போதும் செய்து தர மாவட்ட நிர்வாகம் காத்திருக்கிறது என்றார். உடன் மாவட்ட எஸ். பி ஸ்ரீநாதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஜெம் மருத்துவமனையின் "கருத்தரிப்பு மருத்துவ துறை மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் மையத்தை" டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. திறந்து வைத்தார்

சென்னை, 29 ஆகஸ்ட் 2021: சென்னை ஜெம் மருத்துவமனையில் 'கருத்தரிப்பு மருத்துவ துறை மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் மையத்தை' பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் தொடங்கி வைத்தார். இது பெண்கள் மருத்துவக் குழு தலைமையிலான பெண்களுக்கான சிறப்பு மையமாகும். கௌரவ விருந்தினர் பேராசிரியர் டாக்டர் பர்வீன் சுல்தானா தனது உத்வேகமூட்டும் உரையால் கூட்டத்தை செம்மைப்படுத்தினார்.

தமிழச்சி தங்கபாண்டியன், பெண்களுக்கான சிறப்பு பராமரிப்பு மையத்தைத் திறந்து, சிறந்த சுகாதார சேவைகளை வழங்கி வரும் ஜெம் மருத்துவர்களை வாழ்த்தினார். மேலும் அவர் பேசுகையில், "பல பெண்கள் தங்கள் உடல்நலப் பிரச்சினைகளை மருத்துவர்களிடமும் தங்கள் நெருங்கிய மற்றும் அன்புக்குரியவர்களிடமும் எடுத்துச் செல்ல தயங்குகிறார்கள். பெண்கள் ஒவ்வொரு குடும்பத்தின் முதுகெலும்பாக உள்ளனர். 30 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண்ணும் குறிப்பிட்ட கால இடைவெளியில் முழுமையான மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது மற்றும் ஏதேனும் உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால் மருத்துவரை அணுகுவது முக்கியம். இந்த முக்கியமான பிரச்சினையை தீர்க்க ஜெம் மருத்துவமனையின் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது மற்றும் அவர்களால் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்றார்.

இந்த நிகழ்ச்சியில், ஜெம் மருத்துவமனைகளின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர்.சி.பழனிவேலு பேசுகையில், "இன்சிஷனல் ஹெர்னியா, உடல் பருமன், கோலிசிஸ்டிடிஸ், சிறுநீரகம் மற்றும் சிறுநீர் பாதை நோய்த்தொற்று, பெல்விக் அல்சர், மார்பக புற்றுநோய், கர்ப்பவாய்ப் புற்றுநோய் போன்ற உடல்நலப் பிரச்சினைகள் பெண்களிடையே மிகவும் பொதுவானவை. பல பெண்கள் சமூகத்தின் மீதான பயத்தினால் அவர்களின் உடல்நலப் பிரச்சினைகளைப் பற்றி பேசவோ, ஒரு நிபுணரை அணுகவோ தயங்குகிறார்கள். ஜெம் மருத்துவமனை ஒரு நோயாளி மற்றும் மருத்துவர் உறவுக்கு இடையே உள்ள இடைவெளியை குறைக்க விரும்புகிறது. எனவே 'கருத்தரிப்பு மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் மையத்தை' திறந்துள்ளது. எங்கள் அனைத்து மகளிர் மருத்துவ குழுவும் தங்கள் நோயாளிகளுக்கு தனிப்பயனாக்கப்பட்ட கவனிப்பை வழங்கி தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பெண்கள் எதிர்கொள்ளும் சுகாதார பிரச்சினைகள் மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்" என்றார்.

இந்த அறிமுகம் குறித்து சென்னை ஜெம் மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர்



பி.செந்தில்நாதன் பேசுகையில், "இந்த முயற்சி மனித குலத்திற்கான ஜெம் மருத்துவமனையின் நீண்டகால வரலாற்றில் ஒரு முக்கியமான படியாகும். எங்கள் அனுபவம் வாய்ந்த மகளிர் மருத்துவர்கள் குழுவில் டாக்டர் ஆர். கார்த்திகா - மகப்பேறு மருத்துவத் துறை, டாக்டர் நிவேதிதா மற்றும் டாக்டர் ருக்காயல் பாத்திமா - கருத்தரிப்பு மருத்துவத் துறை, டாக்டர். உத்ரா குமரேசன் - உள் மருத்துவம் மற்றும் நீரிழிவு துறை, டாக்டர் மோனிகா.எஸ் - அறுவை சிகிச்சைத்துறை - மார்பு மற்றும் ஹெர்னியா கிளினிக், டாக்டர். வான்மதி - வலி மருத்துவம் மற்றும் மயக்கவியல் துறை, மற்றும் பலர் அடங்குவர்" என தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், "எங்கள் புதிய விரிவான மையம் வாழ்க்கை முறை மாற்றங்களால் ஏற்படும் பிரச்சனைகள் முதல் பெண்களின் உயிருக்கு ஆபத்தான அனைத்து நோய்களுக்குமான ஒரே தீர்வாக இருக்கும். இந்த துவக்கத்தின் ஒரு பகுதியாக, நாங்கள் ஒரு மாதத்திற்கு அனைத்து நோயாளிகளுக்கும் இலவச கருவுறுதல் ஆலோசனை மற்றும் இலவச ஸ்கேன் வசதியை வழங்குகிறோம்" என்றார்.

"6 ஜோடிகளில் ஒருவருக்கு கருவுறுதல் பிரச்சினைகள் உள்ளன. அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை தேவைப்படும். மாற்றப்பட்ட வாழ்க்கை முறை மாற்றங்கள், உடல் பருமன், தாமதமான கருத்தரித்தல் வயது, எண்டோமெட்ரியோசிஸ் மற்றும் ஃபைப்ராய்டுகள் என பல காரணங்கள் அடங்கும். சில சந்தர்ப்பங்களில், கருவுறுதல் முடிவுகள் கருவுறுதலை மேம்படுத்தும் எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சையைப் பொறுத்தது. ஜெம் மருத்துவமனையில் 17 ஆண்டுகளாக பெண்களுக்கான பிரத்யேக துறை உள்ளது. இது இளமைப் பருவம் முதல் மாதவிடாய் நின்ற காலம் வரையிலான பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கையாளும் மற்றும் குறைந்தபட்ச ஆக்கிரமிப்பு அறுவை சிகிச்சைகளை (லேப்ரோஸ்கோபிக், ஹிஸ்டெரோஸ்கோபிக் மற்றும் ரோபோடிக்) வழங்கி வருகிறது. நவீன சிகிச்சை மற்றும் விரிவான அணுகுமுறையுடன், இந்த தம்பதிகளுக்கு உதவவும் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் நாங்கள் சபதம் செய்கிறோம்" என்றார் டாக்டர். ஆர்.கார்த்திகா, தலைவர் - கருத்தறித்தல் துறை, ஜெம் மருத்துவமனை.

## சட்டசபையில் வேளாண் சட்டங்களுக்கு எதிரான விவாதத்தின்போது ஓ.பன்னீர்செல்வத்துக்கும் துரைமுருகனுக்கும் இடையே கடுமையான விவாதம்

சென்னை, ஆகஸ்ட் 29 2021: தமிழக சட்டசபையில் இன்று வேளாண் சட்டங்களுக்கு எதிரான விவாதத்தின்போது சட்டமன்ற அ.தி.மு.க. துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் அவை முன்னவர் துரைமுருகனுக்கும் இடையே கடுமையான விவாதம் ஏற்பட்டது.

அ.தி.மு.க. வெளிநடப்பு செய்வதாக ஓ.பன்னீர்செல்வம் அறிவித்ததை தொடர்ந்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் சபையை விட்டு வெளியேறினார்கள்.

அப்போது ஓ.பன்னீர்செல்வம் பற்றியும் அவரது மகனை பற்றியும் ஒரு கருத்தை துரைமுருகன் தெரிவித்தார்.

சிறிது நேரத்தில் வெளிநடப்பு செய்த ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் மீண்டும் சபைக்கு வந்தனர். அப்போது துரைமுருகன் எழுந்து, ஓ.பன்னீர்செல்வம் பற்றி நான் பேசிய கருத்தை திரும்ப பெற்றுக்கொள்கிறேன். அதனை அவை குறிப்பில் இருந்து நீக்கி விடுங்கள் என்று கூறினார்.

இதையடுத்து சபாநாயகர்



அதனை அவை குறிப்பில் இருந்து நீக்கினார்.

அப்போது ஒரு பாடலை ஓ.பன்னீர்செல்வம் பாடினார்.

நதியினில் வெள்ளம்... கரையினில் நெருப்பு... இரண்டுக்கும் நடுவே இறைவனின் சிரிப்பு... இதுதான் என் தற்போதைய நிலைமை... என்று பாடினார்.

## அழகர் கோயிலில் யானை ஆய்வு செய்த வனவிலங்கு கமிட்டியினர்

மதுரை, ஆகஸ்ட் 29 2021: அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் அழகர் கோவில். திருக்கோயில்களில் உள்ள யானைகளை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்விற்கான யானை அறிவியல் ஆய்வாளர் மற்றும் மாநில வனவிலங்குகள் கமிட்டியை சார்ந்த டாக்டர். என். சிவகணேசன் அவர்கள் இத்திருக்கோயிலில் உள்ள சுந்தரவல்லி தாயார் யானையை ஆய்வு செய்தார். யானையின் இருப்பிடம், யானைக்கு வழங்கப்படும் உணவுகள் விபரம், யானையின் ஆரோக்கியம் உள்ளிட்டவைகளை ஆய்வு செய்தார்கள். நிகழ்வின் போது யானை எவ்வாறு விரைவாக நடக்கின்றது, எவ்வாறு உணவு உண்கிறது, உடல்நிலை உள்ளிட்ட ஆய்வும் நடைபெற்றது. ஆய்வின்போது திருக்கோயில் துணை ஆணையர் செயல் அலுவலர் தி.அனிதா அவர்கள் மற்றும்



கண்காணிப்பாளர்கள் நாராயணி, பிரதீபா, அசோக் குமார் மற்றும் பேஷ்கார் கருப்பையா மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
ஞாயிற்றுக்கிழமை,
ஆகஸ்ட் 29, 2021

# ஆண்டிபட்டி கடமலை மயிலை ஒன்றியம் மேகமலை ஊராட்சியில் அமைந்துள்ள சின்ன சுருளி அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை வருசநாடு



**வருசநாடு, ஆகஸ்ட் 29 2021: ஆண்டிபட்டி கடமலை மயிலை ஒன்றியம் மேகமலை ஊராட்சியில் அமைந்துள்ள சின்ன சுருளி அருவியில் மேற்குதொடர்ச்சிமலை காரணமாக அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து வருவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். எனவே மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் யாரும் வரவேண்டாம். என வன அதிகாரிகள் தெரிவித்தனர் பாதுகாப்பு பணியில் வனத்துறையினர் மற்றும் மயிலாடும்பாறை காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர்.**

# மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு கோவிட்-19 தடுப்பூசி

**மதுரை, ஆகஸ்ட் 29 2021: மதுரை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்துவதற்கான சிறப்பு முகாம் 02.09.2021-அன்று நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் தகவல் தெரிவித்துள்ளார்.**

**மதுரை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்துவதற்கான சிறப்பு முகாம் 02.09.2021-அன்று நடைபெற உள்ளது. மதுரை மாவட்டத்திலுள்ள மாற்றத்திறனாளிகளுக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்துவதற்கான சிறப்பு முகாம் 02.09.2021 (வியாழக்கிழமை)-அன்று மதுரை வடக்கு, மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மேலூர், கொட்டாம்பட்டி, டி.கல்லுப்பட்டி, சேடப்பட்டி, திருமங்கலம், கள்ளிக்குடி, செல்லம்பட்டி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் ஆகிய 13 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் நடைபெற உள்ளது.**

**இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி மதுரை மாவட்டத்தில் நாளது தேதிவரை கொரோனா தடுப்பூசி செலுத்தாத மாற்றுத்திறனாளிகள் முதல் மற்றும் இரண்டாம் தவணை எதுவாகினும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும் இம்முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

# ஆண்டிபட்டி பேரூராட்சியில் குடிநீர் கேட்டு பொதுமக்கள் பஸ் மறியல்



*ஆண்டிபட்டி:* ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 12 வது வார்டில் குடிநீர் ஒரு மாதமாக வரவில்லை என ஆண்டிபட்டி பேரூராட்சி மக்கள் பஸ் மறியல் செய்தனர் இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்கள்.உடனே ஆண்டிபட்டி பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளர் திரு.முருகானந்தம் மற்றும் காவல் துறை ஆய்வாளர் அவர்களும் 12வது வார்டு பொதுமக்களிடம் புதிய பைப்லைன் ஒரு வார காலத்திற்குள் அமைத்து குடிநீர் தருவதாக பேசியதன் அடிப்படையில் பொதுமக்கள் கலைந்து சென்றதால் போக்குவரத்து சீர்செய்யப்பட்டது. ஆண்டிபட்டி செய்தியாளர் தி.கார்த்திக்.



**மதுரை: மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சியில் தமிழக 100 நாள் திட்டங்கள் சாதனை மற்றும் நோய் தடுப்பு விழிப்புணர்வு புகைப்பட கண்காட்சியினை வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் சரஸ்வதி மூலம் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் துப்புரவு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

# உயர்கல்வி மற்றும் கல்விக்கடன் பெறுவதற்கான வழிகாட்டும் பொறுப்பாளர்களின் கூட்டம் சு.வெங்கடேசன் எம்.பி



*மதுரை, ஆகஸ்ட் 29 2021:* மதுரை மாவட்டத்தில் மாணவர்களுக்கு 500 கோடி ரூபாய் உயர்கல்விக்கான கல்விக்கடனாக வழங்குவதை இலக்காக கொண்டு செயல்திட்டத்தின் துவக்கநிலை தயாரிப்புகள் இன்று துவங்கின. பள்ளிகள் தோறும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல் மற்றும் கல்விக்கடனுக்காக

வித்யாலெட்சுமி போர்டலில் பதிந்து கொடுத்து வழிகாட்டும் பொறுப்பாளர்கள் ஒவ்வொரு மேல்நிலைப்பள்ளிக்கும் ஒருவரை நிச்சயிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் மதுரை மாவட்டத்தில் உள்ள 3 5 7 மேல்நிலைப்பள்ளிகளுக்கும் பொறுப்பாளர்கள் நிச்சயிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயிற்சிக் கூட்டம் இன்று இணையவழியில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் அனீஷ்சேகர் இஆப தலைமை தாங்கினார். மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் அவர்கள் நோக்கங்களை விளக்கி வழிகாட்டித் துவக்கி வைத்தார். மாநகராட்சி ஆணையாளர் கார்த்திகேயன் இ ஆ ப வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சுவாமிநாதன், முன்னோடி வங்கி மேலாளர் அனில் ஆகியோர் பங்கெடுத்தனர். இந்தக் கூட்டத்தை தொடர்ந்து வருகிற 31 ஆம் தேதி அனைத்து மேல்நிலைப்பள்ளிகளிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி செல்வதற்கும் , அதற்கான கல்விக்கடன் பெறுவதற்குமான வழிகாட்டுதல் சந்திப்பு கோவிட் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டு நடைபெற உள்ளது. ஒருவேளை குறிப்பிட்ட பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் பட்சத்தில் இரண்டு அமர்வுகளாக நடத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அதன் முதல்படியாக இன்று சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமார் 400 பொறுப்பாளர்கள் பங்கெடுத்தனர்.

# உச்சிப்புளியில் கஞ்சா விற்பனை செய்த பெண் கைது 350 கிராம் கஞ்சா பறிமுதல்

*ராமேசுவரம், ஆக. 29 2021:* உச்சிப்புளி அடுத்துள்ள முத்துப்பேட்டை பகுதியில் கஞ்சா விற்பனை செய்த வந்த பெண் கைது. 350 கிராம் கஞ்சாவை போலீசார் வியாழக்கிழமை பறிமுதல் செய்தனர். ராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அடுத்துள்ள முத்துப்பேட்டை சேது நகர் பகுதியை சேர்ந்த மாடசாமி இவரது மனவீவி மோகானம்பாள் (52) கஞ்சா விற்பனை செய்து வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து, காவல்துறை ஆய்வாளர் ஆடிவேல் சம்மந்தபட்ட பெண் வீட்டுக்கு சென்று வியாழக்கிழமை சோதனை செய்ய போது அங்கு விற்பனை செய்ய மறைத்து வைத்திருந்து 350 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் மோகானம்பாளை கைது செய்து ராமநாதபுரம் பரமக்கு பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

# ராமேசுவரத்தில் மாற்று திறனாளிகளுக்கு மாதந்திர உதவித்தொகை 3 ஆயிரமாக உயர்த்திட கோரி ஆர்ப்பாட்டம்




*ராமேசுவரம், ஆக. 29 2021:* ராமேசுவரத்தில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாவலர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் மாற்று திறனாளிகளுக்கு மாதந்திர உதவித்தொகையை 3 ஆயிரமாக உயர்த்தி வழங்கிட கோரி தாலுகா அலுவலகம் முன்பு வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்று திறனாளிகள் மற்றும் பாதுகாவலர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் மாற்று திறனாளிகளுக்கு மாதந்திர உதவித்தொகையை மூன்று ஆயிரமாக உயர்த்தி வழங்கிட கோரி தாலுகா அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர். சங்க செயலாளர் எஸ்.சீனிவாசன் தலைமை வகித்தார்.தாலுகா செயலாளர் எம்.தமிழ்செல்வம் முன்னிலை வகித்தார். தாலுகா உறுப்பினர்கள் அ.அசோக், எஸ்.குமார், அ.லெட்சுமணன், ராஜ்குமார், பிரபாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்தகொண்டனர்.

ராமேசுவரம் தாலுகா அலுவலகம் முன்பு மாற்று திறனாளிகள் மாதந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்கிட கோரி ஆர்ப்பாட்டத்தில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.

# கோவை மாநகராட்சி பகுதிகளில் மாஸ்க் அணியாமல் செல்பவர்களுக்கு கட்டாய பரிசோதனை

*கோவை, ஆகஸ்ட் 29 2021:* கோவையில் கொரோனா 2-வது அலை தமிழகத்திலேயே உச்சத்தில் இருந்தது. தொடர்ந்து படிப்படியாக குறைந்து தற்போது இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டு உள்ளது. சுகாதாரத் துறை மருத்துவத்துறை மாநகராட்சி நிர்வாகம் மாவட்ட நிர்வாகம் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து மக்களை பாதுகாத்து வருகின்றனர். இந்த நிலையில் ஊரடங்கி தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டு, கடைகள் இரவு 10 மணி வரை திறந்து வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் கோவையில் அண்டை மாநிலமான கேரளாவில் தொடர்ந்து கொரோனா தொற்று உயர்ந்த நிலையில் உள்ளது. இந்நிலையில் கோவையில் சிறப்பு முகாம்கள், தடுப்பூசிகள் தொடர்ந்து செலுத்தப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் தாய்மார்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பு ஊசி செலுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி நிர்வாகம் சார்பாக கோவை டவுன் பேருந்து நிலையத்தில் அரசு விதித்துள்ள கொரோனா விதிமுறைகளை மீறி மாஸ்க் அணியாமல் செல்லக்கூடிய நபர்களை அழைத்து கட்டாயமாகயாக பரிசோதனை செய்து அவர்களை அனுப்புகின்றனர். பிறகு அவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது.

**கன்னியாகுமரி:** இந்தியாவின் தென்கோடி கன்னியாகுமரியில் குருவின் இரண்டாம் மழையின் காரணமாக சுற்றுலா பயணிகள் நான்கு மாதங்களாக அனுமதிக்கப்படவில்லை இதனால் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கடைகள் வியாபாரிகள் அனைவரும் கவலையில் இருந்தனர். இதனை போக்கும் விதமாக தமிழக அரசு சுற்றுலா பயணிகள் கடற்கரைக்கு செல்லலாம் என உத்தரவு பிறப்பித்தது. இதனால் கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகள் அதிகரித்து வருகின்றனர் காலை சூரிய



உதயம் மாலை சூரிய அஸ்தமனம் பார்ப்பதற்கு சுற்றுலா பயணிகள் அதிகம் வருவதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# பெரியகுளம் லட்சுமிபுரம் அரசு மருத்துவமனை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 5 நாட்களுக்கு கோவிட் தடுப்பூசி

*தேனி, ஆகஸ்ட் 29 2021:* தேனி மாவட்டம், பெரியகுளம் லட்சுமிபுரம் அரசு மருத்துவமனை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இன்றும் நாளையும் 5 நாட்களுக்கு கோவிட் தடுப்பூசி பொதுமக்களுக்கு செலுத்தப்படுகிறது .ஹலோ மெட்றாஸ் செய்தி எதிரொலியால் பாதாள சாக்கடை சுகாதார பணியாளர்களால் தூய்மைப்படுத்தபட்டது. ஹலோ மெட்றாஸ் செய்தியாளருக்கும் பத்திரிகை நிறுவனருக்கும் முத்தாலம்மன் கோவில் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பாராட்டினர் .செய்தியாளர் 10மணி முதல் இரவு 10 மணிவரை பெரியகுளம் நகரை சுற்றிக்கொண்டே வருகிறார் .இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர் அதி வேகமாக செல்கின்றனர். மூன்றதால், சௌராஷ்டிர சத்திரம், வைகை அணை ரோடு, அம்பேத்கார் சிலை ,அரசு போக்குவரத்து பணிமனை முன்பு ,அழகர்சாமிபுரம் நகரின் முக்கிய பகுதிகளில் இரு சக்கர வாகனங்களில் வேகமாக செல்பவர்களை காவல்துறை கண்காணிக்கும்படி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக்கொள்கிறார். இரவு நேரங்களில் புதிய பேருந்து நிலையத்தில் இரவு 9 மணிக்கு மேல் வருவதில்லை .எனவே பயணிகள் அவதிக்குள்ளாகின்றனர். ஆட்டோக்காரர்கள் பேருந்துகள் உள்ளே வருவது இல்லை என்றாலும் பேருந்துகளில் தமிழக அரசு உத்தரவின் படி பெண்களுக்கு இலவசம் என்று கூறியதால் ஆட்டோ உரிமையாளர்கள் வறுமைக்கு உள்ளாகின்றனர். ஆட்சி மாறியது ஆட்டோக்களுக்கு வறுமைக்கு தள்ளப்பட்டது.

இச்சட்டம் மினிவேன் வைத்திருப்பவர்களுக்கும் பாதிப்பு உள்ளது .எனவே எங்களுடைய நிலைமையை மாவட்ட ஆட்சித்தலைவரிடமும் கோரிக்கை வைக்கின்றனர்.

# ராமேசுவரத்தில் நிலமற்ற ஏழைகளுக்கு இடம் வழங்கிட கோரி பெண்கள் மனு

*ராமேசுவரம், ஆக. 29 2021:* ராமேசுவரத்தில் வாடகை வீடுகளில் உள்ள ஏளைகளுக்கு வீடு கட்ட அரசு நிலம் வழங்கிட கோரி 100 க்கும் மேற்பட்ட பெண்கள் வட்டாச்சியரிடம் வெள்ளிக்கிழமை மனு அளித்தனர். ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் பல ஆண்டுகளாக தொடர்ந்து வாடகை வீடுகளில் உள்ள ஏழை, எளியவர்கள் வீடு கட்டிக்கொள்ள தமிழக அரசின் புறம்போக்கு நிலம் தலா மூன்று



செண்ட் வழங்கிட கோரி 100 க்கும் மேற்பட்ட பெண்கள் வட்டாச்சியரிடம் வெள்ளிக்கிழமை மனு அளித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் முருகானந்தம்,மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.ஆர்.செந்தில்வேல், மகளிர் அமைப்பை சேர்ந்த எஸ்.வசந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். ராமேசுவரத்தில் வாடகை வீடுகளில் உள்ள ஏழை, உளியவர்களுக்கு வீடு கட்ட தமிழக அரசு நிலம் வழங்கிட கோரி வட்டாச்சியரிடம் வெள்ளிக்கிழமை 100 க்கும் மேற்பட்ட பெண்கள் மனு அளித்தனர்.

*சென்னை:* விருகம்பாக்கத்தில் உள்ள கூட்டமைப்பு அரங்கில் நடைபெற்றது விழாவில் தமிழ்நாடு சின்னத்திரை இயக்குநர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் , இயக்குனர் - தளபதி தலைமை தாங்க , சின்னத்திரை நடிகர் சங்கத்தின் தலைவர் மற்றும் தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் செயலாளர் ஏ. ரவிவர்மா வரவேற்புரை வழங்க , தமிழ்நாடு சின்னத்திரை இயக்குநர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மற்றும் தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின்



துணைத்தலைவர் , இயக்குனர் - சி . ரங்கநாதன் தொகுத்து வழங்க , தமிழ்நாடு சின்னத்திரை படத்தொகுப்பாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் பொருளாளர் வி. ராஜா நன்றியுரை வழங்கினார் , வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழை விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா வழங்கினார் . அகில இந்திய நேஷனல் பிலிம் டெவெலப்மென்ட் கார்ப்பரேஷன் இயக்குனர் ராஜேஸ்கண்ணா வாழ்த்துரை வழங்கினார் . விழாவில் தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பு துணைத்தலைவர் எம்.டி. மோகன் , இயக்குநர் ஆர். அரவிந்தராஜ் , சி.என். ரவிசங்கர் , பிரையன் பெர்னாண்டோ , கே , நட்ராஜ் முன்னிலையில் நடைபெற்றது . மேலாளர் கௌதமன் மற்றும் பி.ஆர்.ஓ கடையாம்ராஜு வரவேற்றனர்.



*சென்னை:* சென்னை, நகர்ப்புறத்தில் உள்ள சென்னசமுத்திரம், நெமிலி, வானகரம், பரனூர், சூரப்பட்டு ஆகிய 5 சுங்கச்சாவடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு.

# செப்டம்பர் 1-ம் தேதி முதல் மீண்டும் பள்ளிகளாக திறப்பு கொரோனா மையமாக செயல்பட்ட பள்ளி கல்லூரிகளில் உள்ள நோயாளிகளை கொடிசியா மாற்ற ஏற்பாடு

*கோவை, ஆகஸ்ட் 29 2021:* கோவையில் கடந்த மே மாதம் கொரோனா இரண்டாவது அலையின்போது தினசரி பாதிப்பு 4-ஆயிரத்தை கடந்தது. இதனால் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் நிரம்பி வழிந்தன. இதையடுத்து பல்வேறு கல்லூரிகள், பள்ளிகளில் கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இதையடுத்து, தற்போது ஏற்படுத்தப்பட்டு உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அகற்றுவது இல்லை என்று மாவட்ட நிர்வாகம் முடிவு செய்தது. இந்நிலையில் தமிழகத்தில் செப்டம்பர் 1-ம் தேதி முதல் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட உள்ளன.

இதன் காரணமாக மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த கொரோனா சிகிச்சை மையங்கள் மூடப்பட்டுள்ளன. ஆனால் உட்கட்டமைப்பு வசதிகள் அப்படியே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் சமீரன் கூறியதாவது:- கோவையில் அரசு கலைக்கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் கொரோனா சிகிச்சை மையங்கள் உள்ளன. பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்படுவதையொட்டி இந்த மையங்கள் தற்காலிகமாக மூடப்படுகிறது.

புதிதாக கொரோனா நோயாளிகள் யாரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படமாட்டார்கள். தற்போது சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் கொடிசியா சிகிச்சை மையத்திற்கு மாற்றப்பட்டு உள்ளனர்.

கல்வி நிலையங்களில் உள்ள கொரோனா சிகிச்சை மையங்களில் இருக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் எதுவும் அகற்றப்படாது, அப்படியே இருக்கும். மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்தால் இந்த மையங்கள் திறக்கப்பட்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படுவதால் இந்த மையங்கள் அனைத்தும் கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யப்பட்டு உள்ளன. அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பேருந்து நிலையத்தில் தார் ரோடு பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் பஸ் நிலையம் சீரமைக்கப்படுமா



**கன்னியாகுமரி, ஆகஸ்ட் 29 2021: உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியில் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர் சுற்றுலா பயணிகள் வந்து செல்ல வசதியாக பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பேருந்து நிலையத்தில் தார் ரோடு பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பயணிகள் பஸ் நிலையம் செல்லும்போது தூசிகள் வீசுகின்றன. பொதுமக்கள் செல்லும்போது முட்புதர்கள் வளர்ந்து மக்களை பயமுறுத்தும் அளவிற்கு உள்ளனர் ஆகையால் பேருந்து நிலையத்தை சரிசெய்வதற்கு அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும். என பொதுமக்களின் கோரிக்கையும் சமூக ஆர்வலரின் கோரிக்கையாக உள்ளது.**

DTP
DESIGN
All Online Services
8144337349

# விஜய் மக்கள் இயக்கம் மதுரை புறநகர் தெற்கு மாவட்ட தொண்டரணி தலைமை சார்பாக நலத்திட்ட உதவிகள்



**மதுரை, ஆகஸ்ட் 29 2021: மதுரை புறநகர் தெற்கு மாவட்ட தொண்டரணி தலைமை சார்பாக திருநகர் மருதுபாண்டியன் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் அகில இந்திய மாநில பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த் எக்ஸ்.எம் எல்.ஏ கலந்துகொண்டு ,மதுரை மாவட்ட பொறுப்பாளர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி முன்னிலையில் பெண்களுக்கு அரிசி, குடம், சேலை மற்றும் பள்ளிக்குழந்தைகளுக்கு பேக், ஆட்டோ டிரைவர்களுக்கு காக்கி சீருடை வழங்கினார்.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை தாலுகா அலுவலகத்தின் அவலநிலை பெரியகுளத்தில் உள்ள தாலுகா அலுவலகம் பத்திர பதிவு அலுவலகம் இ சேவை மையம், குறைந்த பட்சம் நாள் 500 க்கும் மேல் பொதுமக்கள் வருகை புரிகின்றனர் .வருகைபுரியும் மக்களுக்கு சிறுநீர் கழிக்க கூட இடம் இல்லை .தாலுகா அலுவகலகத்தில் எவ்வளவோ இடம் காலியாக உள்ளது பெண்கள் மிகவும் வருந்துகின்றனர். அவ்வழியாக சென்ற நிருபர் நேரில் கண்ட நிகழ்வு .வாட்டர் டேங்க் உள்ளது. ஒரு நபர் பாட்டிலுடன் அருந்த செல்கிறார். ஆனால் குடிநீர் வரவில்லை அந்த நபர் இந்த தாலுகா அலுவலகத்தில் குடிக்க கூட குடிநீர் இல்லை. என்று வருத்தத்துடன் விடை பெற்று சென்றார். எனவே பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வட்டாச்சியர் கோரிக்கை வைக்கின்றனர்.**

# வளர்ச்சி பணியில் தீவிரம் காட்டும் வருசநாடு ஊராட்சி

வருஷநாடு, ஆகஸ்ட் 29 2021: தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியில் வளர்ச்சிப் பணியில் வி நி ழி ஸி ணி நி ஷி இத்திட்டத்தின்கீழ் 15வது நிதிக்குழு மானியத்தில் நிதி பெற்று ஏற்கனவே வருஷநாடு அம்பேத்கார் நகர் அரசு மருத்துவமனை பின்புறம் செல்லும் சாலையில் 56 மீட்டரில் பேவர் பிளாக் பதிக்கப்பட்டுள்ளது மீதமுள்ள 65 மீட்டரில் பேவர் பிளாக் ரோடு சிறு வாழ்வும் வடிகால் வசதியும் மேலும் புதிய ராஜவேல் பிளாட்டில் பேவர் பிளாக் மற்றும் சாக்கடை வசதியும் கலில் தோப்பில் குமரன் தெருவில் 3. 85 லட்சத்தில் சிமெண்ட் ரோடு பணியும் தொடங்க உள்ளது வருஷநாடு மெயின் ரோட்டில் இருந்து சுடுகாடு வரை 7. 97 லட்சத்தில் பேவர் பிளாக்



பதிக்கும் பணியும் நடைபெற இருப்பதாகவும் அடுத்த நிதியில் ஊராட்சிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் அடிப்படைத் தேவைகள் முழுமையாக செய்து கொடுப்போம் என்றும் ஊராட்சியில் குறைகள் எதுவானாலும் ஊராட்சி நிர்வாகத்தில் நேரடியாக கேட்டு விளக்கம் பெற்று கொள்ளலாம் எனவும் ஊராட்சியில் துப்புரவு பணியாளர்கள் மீது குறை இருந்தால் நிர்வாகத்திடம் நேரடியாக தெரிவிக்கலாம் என்றும் ஊராட்சியின் வளர்ச்சிப் பணியில் இனிவரும் காலங்களில் தொய்வு ஏற்படாது என ஊராட்சி தலைவர் மணிமுத்து துணைத்தலைவர் கண்ணன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஊராட்சி செயலாளர் முருகேசன் ஆகியோர் கூறுகின்றனர் மேலும் குறையிருந்தால் ஊராட்சி தலைவர் 95 85 11 93 11 என்ற எண்ணிலும் துணைத் தலைவர் 98 43 40 72 57 என்ற எண்ணிலும் அழைக்கலாம் என்று கூறியுள்ளனர்.

# தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட நெகிழி வகைகளை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு 23 ஆயிரம் அபராதம்

நாகர்கோவில், ஆகஸ்ட் 29 2021: நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட கோட்டார் பகுதியில் மாநகராட்சி ஆணையர் ஆசை அஜித் உத்தரவின்பேரில் மாநகர நல அலுவலர் மருத்துவர் எம் விஜய் சந்திரன் தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழு நெகிழி உபயோகித்து தடை செய்யவும் பொருட்களை ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட நெகிழி வகைகளை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு 23 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. 80 கிலோ எடையுள்ள நெகிழி பறிமுதல் செய்யப்பட்டு இதுபோன்ற திடீர் ஆய்வு தினமும் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. நெகிழி விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.



நாகர்கோவில் மகார மாநகராட்சிக்கு உட்பட்ட சற்குண வீதியை ஒரு தெருவில் இருக்கும் இரு சக்கர வாகனங்கள் மறு விற்பனை செய்யும் வியாபாரிகளின் வாகனங்களை சாலையோரங்களில் நிறுத்தி விற்பனை செய்யும் வியாபாரிகள் வாகனங்களை சாலையோரங்களில் நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பதாக மாநகராட்சிக்கு புகார் அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மாநகராட்சி ஆணையர் உத்தரவின்பேரில் அபராதம் விதிக்கப்பட்டு அனைத்து வாகனங்களையும் மாற்று இடங்களில் உடவும் உத்தரவிட்டார்.

# விக்கிரவாண்டி டோல் பிளாசாவில் செப்.1-ம் தேதி முதல் சுங்க கட்டணம் உயர்வு அமுல்

விக்கிரவாண்டி, ஆக. 29 2021: விக்கிரவாண்டியிலுள்ள உளுந்தூர்பேட்டை எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிட் டோல் பிளாசாவில் வருடாந்திர கட்டண உயர்வு வரும் செப்.1 ம்தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

திண்டிவனம் புறவழிச்சாலையிலிருந்துரூ உளுந்தூர் பேட்டை செங்குறிச்சி வரை 73.9 கிலோமீட்டர் தூரத்திற்கு விக்கிரவாண்டியிலுள்ள உளுந்தூர்பேட்டை எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிட் நான்கு வழிச்சாலையை பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வருகிறது. சாலையை மேம்படுத்தும், பராமரிப்பு பணிக்காக நகாய் ஆண்டுதோறும் செப்.1 ம் தேதி முதல் கட்டண உயர்வை அறிவித்து வாகன ஓட்டிகளிடம் வசூலித்து வருகின்றனர். இந்தாண்டு விக்கிரவாண்டி டோல் பிளாசாவில் வாகனங்களுக்கு வசூலிக்க கட்டணத்தை நகாய் அறிவித்துள்ளது. அதன் கட்டண விபரம் பின்வருமாறு

பழைய கட்டணம் வசூலிப்பு விகிதம் அடைப்பு குறிக்குள் உள்ளது.

கார்,ஜீப்,பயணிகள் வேன் ஒரு முறை பயணிக்க புதிய கட்டணம் ரூபாய் 90 (80), பலமுறை பயணிக்க ரூபாய் 135(125) மாதாந்திர கட்டணம் ரூபாய்

2660 (2465). இலகு ரக வணிக வாகனத்திற்கு ஒரு முறை பயணிக்க புதிய கட்டணம் ரூபாய் 155 (145), பலமுறை பயணிக்க ரூபாய் 235(215) மாதாந்திர

கட்டணம் ரூபாய் 4650(4310).டிரக், பஸ் ஒரு முறை பயணிக்க புதிய கட்டணம் ரூபாய் 310 (285), பலமுறை பயணிக்க ரூபாய் 465(430) மாதாந்திர

கட்டணம் ரூபாய் 9305(8625).பலஅச்சு வாகனம் ஒரு முறை பயணிக்க புதிய கட்டணம் ரூபாய் 500 (460), பலமுறை பயணிக்க ரூபாய் 750(695)

மாதாந்திர கட்டணம் ரூபாய் 14950(13860). பள்ளி பேருந்துகளுக்கு கட்டணத்தில் மாற்ற மின்றி மாதாந்திர கட்டணமாக ரூபாய் 1000 மட்டில். அதே

போன்று உள்ளூர் வாகன கட்டணத்தில் எவ்வித மாற்றமின்றி வகை ஒன்று ரூபாய் 150 , வகை இரண்டு ரூபாய் 300 என நகாய் அறிவித்துள்ளது.

புதிய கட்டண உயர்வுக்கான அறிவிப்பு நோட்டீஸ் டோல் பிளாசாவை கடக்கும் ஒவ்வொரு வாகனத்திற்கும் வழங்கியும், டோல் பூத்துகளில் ஒட்டியும்

அறிவிப்பு வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு கொரோனா தொற்றை முன்னிட்டு கட்டண உயர்வு இல்லாமல் 2019ம் ஆண்டு கட்டண முறையே 2020ம் ஆண்டில் வசூலித்தனர். என்பது குறிப்பிடதக்கது.

# அரசு பள்ளியில் 201வது மாணவர் சேர்க்கை விழா கேக் வெட்டி கொண்டாட்டம்

விக்கிரவாண்டி, ஆக. 29 2021: விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சேர்க்கைக்கு வந்த 201 வது மாணவரை ஆசிரியர்கள் கேக் வெட்டி வரவேற்றனர்.

தமிழக அரசு அனைவருக்கும் கல்வி இயக்கத்தினை சிறப்பாக செயல்படுத்தியும், பள்ளியில் இடையில் நின்ற மாணவர்களை வீடு தேடி சென்று மீண்டும் பள்ளியில் பாடம் படிக்க சேர்த்து வருகின்றனர்.

கொரோனா தொற்று காரணமாக பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை வெகுவாக குறைந்த நிலையில் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில்



சேர வந்த 201 வது மாணவர் சேர்க்கையை சிறப்பாக கொண்டாடும் வகையில் ஆசிரியர்கள் கேக் வெட்டி மாணவரை வரவேற்று பள்ளியில் சேர்த்து பாட புத்தகங்களை வழங்கினர். பள்ளி தலைமை ஆசிரியர் தேவநேசன் மற்றும் பள்ளி அனைத்து வகுப்பு ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் தேவநேசன் தலைமையில் ஆசிரியர்கள் 201 வது மாணவரை கேக் வெட்டி வரவேற்றனர்.

# பொய் வாக்குறுதி, பொய் வழக்கு போடும் திமுக அரசை கண்டித்து திருக்கழுக்குன்றத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட அதிமுக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் தலைமையில் நடந்தது

செங்கல்பட்டு ஆகஸ்ட் 29 2021: திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் நடந்த இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொய் வாக்குறுதி, பொய் வழக்கு, மக்களை வஞ்சிக்கும் திமுக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது அப்போது





செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்தார் பிறகு திமுக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது. பிறகு செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆறுமுகம் கூறியதாவது: நமது அண்ணா திமுக ஆட்சியில் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி,முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தமிழ் நாட்டின் நலனுக்காக மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வந்தனர். குறிப்பாக பெண்களுக்கு தாலிக்கு தங்கம், ரொக்கப்பணம், லேப்டாப், இலவச சைக்கிள்,மானிய விலையில் ஸ்கூட்டர் உள்பட அடுக்கடுக்கான அறிவிப்புகளை வழங்கி செயல்படுத்தியது. அண்ணா திமுக அரசு தான். தமிழ்நாட்டில் அண்ணா திமுகவினர் ஒவ்வொரு தொண்டனும் முன்னாள் முதல்வர் எடப்பாடியார் பக்கம்தான் உள்ளனர் சசிகலாவை என்ற தொண்டனும் ஏற்க மாட்டார்கள்.

பொய் வாக்குறுதி பொய் வழக்கு மக்களை வஞ்சிக்கும் திமுக அரசை நாங்கள் கண்டிக்கிறோம்.

வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு வெற்றிக்கனியை முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி முன்னாள் துணை முதல்வர் ஓ.

பன்னீர்செல்வம் ஆகியோரது காலடியில் வெற்றிக்கனியை சமர்ப்பிப்போம் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக அவைத் தலைவரும் முன்னாள் எம்.எல்.ஏவுமான ம.தனபால், முன்னாள் எம்.எல்.ஏக்கள் தண்டரை கே.மனோகரன், மதுராந்தகம் பா.வாசுதேவன்,மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் வி.வேலாயுதம்,மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் வி.பக்தவச்சலம், மாவட்ட கழக துணைச் செயலாளர் எஸ்வந்த்ராவ், மாவட்ட எம்ஜிஆர் மன்ற நிர்வாகி இடைக்கழிநாடு ஜெ. பாலசுப்பிரமணியம், மாவட்ட வக்கீல் பிரிவு நிர்வாகி செய்யூர் வழக்கறிஞர் ஜி.ஜெயச்சந்திரன் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் மதுராந்தகம் கோ. அப்பாதுரை,சித்தாம்பூர் இ. கிருஷ்ணமூர்த்தி, அனந்தமங்கலம் சுப்பிரமணி, திருக்கழுக்குன்றம் கே.ஆர் செல்வம், தையூர் எஸ். குமரவேல், பெரும்பாக்கம் சி, விவேகானந்தன், மாமல்லபுரம் ஜி.ராகவன், திருக்கழுக்குன்றம் பேரூர் கழகச் செயலாளர் டி. தினேஷ்குமார், இடைக்கழிநாடு பேரூராட்சி அதிமுக செயலாளர் டி. ஆறுமுகம் உள்பட ஏராளமான அதிமுகவினர் கலந்து கொண்டனர்.

# பெருமாள் கோவிலில் ராஜகோபுரத்தில் சந்தன கல் பதிக்கும் பூஜை

விக்கிரவாண்டி, ஆக. 29 2021: விக்கிரவாண்டி வரதராஜபெருமாள் கோவிலில் ராஜகோபுர திருப்பணியில் சந்தன கல் பதிக்கும் பூஜை நடந்தது.

விக்கிரவாண்டி மெயின்ரோட்டிலுள்ள மிகவும் பழமை வாய்ந்த ஸ்ரீபெருந்தேவி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோவிலில் புணரமைப்பு திருப்பணி

நடைபெற்றுவருகிறது. இதில் ஒரு அங்கமாக புதியதாக கோவிலுக்கு மூன்று அடுக்குகளுடன் கூடிய ராஜகோபுரம் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. நேற்று காலை ராஜகோபுரத்தின் உச்சியில் சந்தன கல் பதிக்கும் பூஜைக்காக நவதானியம், வெள்ளி, தங்கநாணயங்கள் வைத்து அத்தியூர் சக்கரை

பாகவதர், விக்கிரவாண்டி சந்திரசேகர குருக்கள் ஆகியோர் சிறப்பு பூஜை செய்தனர்.

பின்னர் ஸ்பதி திருவதிகை முருகன் ராஜகோபுரத்தின் உச்சியில் கலசம்



வைப்பதற்காக சந்தன கல் பதித்து அதில் நவதானியம், வெள்ளி தங்க

நாணயங்களை வைத்தனர். நிகழ்ச்சியில் திருப்பணிக்குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் பூர்ணராவ், பொருளாளர் செல்வகுமார், ஒருங்கிணைப்பாளர் சீனுவாசன், முன்னாள் சேர்மன் குமாரசாமி,கவுரவ தலைவர் சுப்புராயலு, குழு உறுப்பினர்கள் வாசு, ராஜா, சங்கர், சுகுமார், பாபு, ரவி, தேவா, சக்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி வரதராஜபெருமாள் கோவிலில் புதிய ராஜகோபுரத்தின் உச்சில் சந்தன கல் பதிக்கும் பூஜை நடந்தது. விக்கிரவாண்டி வரதராஜபெருமாள் கோவிலில் புதிய ராஜகோபுரத்தின் உச்சியில்சந்தன கல் பதிக்கும் பூஜையில் நவதானியங்கள் கொட்டி நிரப்பினர்.

# கடமலை மயிலை ஒன்றியத்தில் வளர்ச்சி பணிகளுக்கு நிதி தேவை

தேனி, ஆகஸ்ட் 29 2021: வருசநாடு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியத்தில் கண்டமனூர் எட்டப்ப ராஜபுரம் ஆத்தங்கர பட்டி பால் ஊத்து கடமலைக்குண்டு மயிலாடும்பாறை குமணன் தொழு மேகமலை பொன்னன் படுகை மூலக்கடை முத்தாலம்பாறை நரியூத்து தங்கம்மாள்புரம் வருசநாடு சிங்கராஜபுரம் முறுக் கோடை தும்மக்குண்டு மந்திசுனை மேற்கண்ட 18 ஊராட்சிகளில் வளர்ச்சி பணிகளுக்கான வேலையில் தொய்வு ஏற்படுகிறது. இதில் சாக்கடை வசதி சிசி ரோடு பேவர் பிளாக் வடிகால் வசதி குடிநீர் வசதி தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் நடைபெறும். ஆனால் ஒரு சில ஊராட்சிகளில் தலைவர்கள் தனது சொந்த பணத்திலும் தனிநபர் இடம் வாங்கியும் வளர்ச்சிப் பணிகளை செய்து வருகின்றனர் மேலும் மேற்கண்ட ஊராட்சிகளுக்கு மாவட்ட நிர்வாகம் நிதி வழங்கி ஊராட்சியின் அடிப்படை வளர்ச்சிப்



பணிகளை செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது மக்கள் தொகை அதிகமான காரணத்தினாலும் புதிய பிளாட் உருவாகி வீடுகளும் அதிகமாகியுள்ளது இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க கிராம ஊராட்சியின் தூண்களாக விளங்கும் மாவட்ட நிர்வாகம் நிதி வழங்க வேண்டும் நிதி வழங்காததால் ஊராட்சி நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட வேண்டிய சூழலும் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு ஊராட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த மாவட்ட நிர்வாகம் நிதி வழங்க வேண்டும். என கடமலை மயிலை ஒன்றிய 18 ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் நிர்வாகத்தின் சார்பாக கோரிக்கை வைத்துள்ளனர்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth





VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Sunday, August 29, 2021 | Rs.2/- | ISSUE - 46

## Pradhan Mantri Jan-Dhan Yojana (PMJDY) National Mission for Financial Inclusion,completes seven years of successful implementation

New Delhi, August 29 2021: Ministry of Finance is committed to provide financial inclusiveness and support to the marginalized and hitherto socio-economically neglected classes. Financial Inclusion is a national priority of the Government as it is an enabler for inclusive growth. It is important as it provides an avenue to the poor for bringing their savings into the formal financial system, an avenue to remit money to their families in villages besides taking them out of the clutches of the usurious money lenders. A key initiative towards this commitment is the Pradhan Mantri Jan Dhan Yojna (PMJDY), which is one of the biggest financial inclusion initiatives in the world.

PMJDY was announced by Prime Minister, Shri Narendra Modi in his Independence Day address on 15th August 2014. While launching the programme on 28th August, the Prime Minister had described the occasion as a festival to celebrate the liberation of the poor from a vicious cycle.

On the 7th Anniversary of PMJDY, Finance Minister Smt. Nirmala Sitharaman reiterated the importance of this Scheme "The journey of PMJDY led interventions undertaken over a short span of 7 years has in effect, produced both transformational as well as directional change thereby making the emerging FI ecosystem capable of delivering financial services to the last person of the society-the poorest of the poor. The underlying pillars of PMJDY, namely, Banking the Unbanked, Securing the Unsecured and Funding the Unfunded has made it possible to adopt multi-stakeholders' collaborative approach while leveraging technology for serving the unserved and underserved areas as well." she said

Minister of State for Finance, Dr. Bhagwat Karad also expressed his thoughts for PMJDY on this occasion. He said "Pradhan Mantri Jan Dhan Yojana (PMJDY) has been one of the most far reaching initiatives towards Financial Inclusion not only in India but in the world. Financial Inclusion is among



top-most priorities of the Government as it is an enabler for inclusive growth. It provides an avenue to the poor for bringing their savings into the formal financial system, an avenue to remit money to their families besides taking them out of the clutches of the usurious money lenders."

As we complete 7 years of successful implementation of this Scheme, we take a look at the major aspects and achievements of this Scheme so far.

## Minister SIVA V. MEYYANATHAN Felicitated TamilNadu Athletes and Coaches from TOKYO OLYMPICS 2020

Chennai, August 29, 2021: The Tamilnadu Athletics Association Felicitation Function held at Media Hall, Jawaharlal Nehru Stadium, Chennai, on Friday, the 27th August, 2021 to celebrate and recognize the achievements of our State's Athletes and Coaches who had taken part in the OLYMPIC GAMES at TOKYO - 2020 and World Under-20 Athletics Championships at Nairobi.



Siva. V. Meyyanathan, Minister of Youth Welfare and Sports, together with former Olympians and Arjuna Awardees from our State graced the occasion to felicitate the above Athletes and Coaches.

For the first time in the history of Tamil Nadu state, as much as five athletes represented India and taken part in the Tokyo Olympics. In addition, three young athletes from the State had taken part in the World Athletics U20 Championships held at Nairobi, Kenya on behalf of India.

Arokia Rajiv and Naganathan Pandi among the men, Revathi Veeramani, Subha Venkatesan and Dhanalakshmi Sekar among the women represented India in Men's 4 x 400m relay and Mixed 4 x 400m relay races at Tokyo.

The Men's 4 x 400m relay team in which Arokia Rajiv took part narrowly missed a chance to enter the final but credited with a new ASIAN RECORD time of 3 minutes 0.25 seconds.

Never before in the history of Tamil Nadu state's athletics so many athletes represented at a single edition of the Olympic Games. In the previous Rio Olympic Games in 2016 only four athletes from Tamil Nadu were part of the Indian team in athletics.

In Tokyo, for the first time a record number of THREE WOMEN ATHLETES from the State participated amongst the total FIVE athletes, that included the two men as mentioned above.In the World Athletics U20 championships held at Nairobi, Kenya, (Aug 18-22) our State's athlete Barath Sridhar had won a Bronze Medal as part of the Indian Mixed 4 x 400m relay squad. Another athlete from our state, S. Nagarjunan, was also part of the relay team as a reserve runner. In triple jump, Tamil Nadu's Donald Makimairaj barely missed the bronze medal in just 3 cm to a French boy Simon Gore. However his fourth place finish was an improvement from his predecessor K. Kamal Raj, who finished fifth in this event in the previous edition of the World Junior Championships held in 2018 at Tampere, Finland. Tokyo Olympians P. Naganathan (4x400m men's relay), V. Revathi, V. Subha and S. Dhanalakshmi (all 4x400m mixed relay) were given Rs.1 lakh each. S. Barath, who was part of the bronze winning 4x400m mixed relay team in Nairobi, was also given Rs. 1 lakh while other participants — M. Donald (triple jump), S. Nagarjunan (4x400m relay) were given Rs.50,000 each.Coaches were honoured with Rs.20,000 each.

## Prime Minister Narendra Modi speaks on telephone with Prime Minister of Italy Mario Draghi

New Delhi, August 29 2021: Prime Minister Shri Narendra Modi spoke on telephone today with the Prime Minister of Italy H.E. Mr. Mario Draghi.

The leaders discussed the recent developments in Afghanistan and its implications for the region and the world.

They strongly condemned the horrific terror attack at the Kabul International Airport yesterday, and emphasised the need to ensure the safe repatriation of stranded people.

They stressed upon the need for international cooperation, including at the level of the G20, in addressing the humanitarian crisis and long term security concerns arising out of the developments in Afghanistan.

The two leaders also discussed other important issues on the G20 agenda, such as Climate Change. In this context, they exchanged views on other forthcoming multilateral engagements too, such as COP-26.



Prime Minister appreciated Italy's dynamic leadership in productively steering discussions within the G20.

The two leaders agreed to remain in touch on bilateral and global issues, especially on the situation in Afghanistan.

## Now Personalize your fan in the shade of your choice-a Unique Offering from Fanzart

Bangalore, August 27, 2021: Fanzart has been in the business of designer luxury fans for close to a decade now, and is at the forefront of innovation in the sector. In a latest offering, Fanzart now enables its customers to personalize any fan from their catalog to a color shade of their choice. This includes being able to customize the color of your fan blades, the motor housing, and the downrod too. With this option, customers can create a luxury fan that can be incorporated into the interior design of their space in a personalized manner – making their homes truly one-of-a-kind.

Speaking on the launch of this latest offering, TarunLala, Executive Director, Fanzart says, "We strongly believe that luxury fans should make way for customization. This offering is the natural next step for our customers looking for something that is uniquely them. It can be incorporated into our wide portfolio of designer fans – those with lights, retractable blades, wooden blades, and even our pedestal fans. We are sure that interior designers and architects will find this a useful feature too, to provide their clients with exclusive interior design options".

As pioneers in the field of luxury fans, Fanzart offers customization for select models in more than 3600





shades allowing you to create a luxury fan that can be incorporated into the interior design of your space in a personalized manner – making your homes truly one-of-a-kind.

E- SEVA CENTER
STAR RAINBOW SERVICES
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
8148231942 / 8144337349
DTP & DESIGN
ALL ONLINE SERVICES

## Chennai welcomes the second exclusive preview of the much-awaited Volkswagen Taigun in India

Chennai, August 29, 2021: The Volkswagen Taigun is the brands' much-anticipated SUVW that will be launched in India on 23rd September 2021, right at the heart of the festive season.

During the exclusive preview, prospective customers will get the opportunity to experience the Volkswagen Taigun firsthand, along with the brands' recently activated 360-degree visualizer. The 360-degree visualizer enables customers to view the features of the Taigun at the comfort of their homes via digitally connected devices like mobile phones, tablets, laptops or desktops. In addition, customers can also seek information on the accessories that will be available on the Taigun. Giving them the opportunity beforehand to understand how well the Taigun can suit their lifestyle requirements.

Speaking on the occasion, Mr. Ashish Gupta, Brand Director, Volkswagen Passenger Cars India said, "For Volkswagen India, South market has always been a major contributor in terms of the overall brand sales. To




further enhance our reach and strengthen our position, we are organizing the exclusive preview of our brand-new offering, the Volkswagen Taigun in Chennai. Through these exclusive previews, we are providing our customers with an exclusive opportunity to experience the Volkswagen Taigun along with our new brand design language and digitalized solutions that enhance accessibility and convenience for the customer."

Volkswagen India has been relentlessly working towards enhancing its value proposition and customer experience. The brand over the last couple of months has been strengthening its network presence along with the implementation of its new brand design and logo across its dealerships in India. The new design language represents the brands' vibrant, modern, innovative, digitalized and humane outlook. Customers can visit any of the seven touchpoints of Sundaram Motors or KUN Motors in Chennai, to experience the 'New Volkswagen'.

To further enhance customer experience, Volkswagen has invested in the development of digitalized initiatives that increase accessibility towards the brand. Under its Sarvottam 2.0 program, the brand has identified over 40 solutions along the customer journey that would simplify processes, through digitalization and people development, offering an improved customer connect basis evolving preferences. Some of the solutions under the program include 360-degree visualizer, Test drive scheduler, Service Cam, WhatsApp for business, Paperless documentation, Car Health Report and a lot more.

All of the above initiatives will further amplify the experience of owning a Volkswagen Taigun. The carline boasts of a charismatic design language with striking exteriors, premium interiors including a digital cockpit, and 40+ inbuilt safety features. The Taigun retains the brands' core DNA of superior built quality, safety and a fun-to-drive experience. It is powered by Volkswagen globally renowned TSI technology and will be available with two engine options: 1.5L TSI mated to 7-speed DSG and 6-speed manual gearbox and 1.0L TSI engine mated to 6-speed automatic and manual gearbox.

## AMI ORGANICS LIMITED INTIAL PUBLIC OFFERING TO OPEN ON SEPTEMBER 01, 2021

Mumbai, August 29 2021: Ami Organics Limited (**"Company"**), a research & development driven manufacturer of specialty chemicals with varied end usage and is one of the major manufacturers of pharma intermediaries for certain key APIs, proposes to open its Initial Public Offering on Wednesday, September 01, 2021.

The Price Band of the offer has been fixed at Rs. 603 to Rs. 610 per Equity Share. Bids can be made for a minimum of 24 Equity Shares and in multiple of 24 Equity Shares thereafter. The Offer will close on Friday, September 03, 2021.

The Initial Public Offering comprises of fresh issue of equity shares of face value  10 each (**"Equity Shares"**). The Offer comprises of fresh issue of such number of Equity Shares aggregating up to Rs. 200 crores (**"Fresh Issue"**) and an offer of sales of up to 6,059,600 Equity Shares, constituting up to 700,000 Equity Shares by Parul Chetankumar Vaghasia (**"Promoter Selling Shareholder"**), Up to 1,500,000 Equity Shares by Girishkumar Limbabhai Chovatia, Up to 3,050,000 equity shares by Kiranben Girishbhai Chovatia, Up to 174,600 Equity Shares by Aruna Jayantkumar Pandya (jointly held with Jayant Manubhai Pandya), Up to 87,300 Equity Shares by Hina Indreshbhai Shah, up to 87, 280 Equity Shares by Harshad Ramlal Sheth, up to 76,200 Equity Shares by Dhirajlal Amrutlal Amlani, up to 75,000 Equity Shares by Vrushti Atulkumar Shah, Up to 63,000 Equity Shares by Jolitbhai Jasvantlal Shah (jointly held with Amitaben Jolitbhai Shah), Up to 55,920 Equity Shares by Nishit Atulkumar shah, Up to 49,000 Equity Shares by Surabhi Yash Shah, Up to 32,000 Equity Shares by Narmada Amrutlal Amlani, Up to 26,500 Equity Shares by Shanti Devi Kankaria, Up to 19,000 Equity Shares by Divya Mahendrakumar Kankaria, Up to 15,000 Equity Shares by Chovatiya Haresh H, Up to 14,910 Equity Shares by Amitaben Jolitbhai Shah(jointly held with Jolitbhai Jasvantlal Shah), Up to 14,500 Equity Shares by Saryu Dhirajlal Amlani, Up to 10,000 Equity Shares by Koladia Mehul M,



Up to 8700 Equity Shares by Jyotiben Rakeshbhai Lahoti (jointly held with Rakesh Baluram Lahoti) and Up to 690 Equity Shares by Shah Disha Jolit (jointly held with Jolitbhai Jasvantlal Shah) (**"Collectively, "Selling Shareholders" and such Equity Shares "Offered Shares") ("Offer For Sale") and together with the Fresh Issue, the "Offer")**

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction